ஸ்ரீ
ராமஜெயம்.

சித்திரகுளாவென்னும் பெண்ணின்

கொடையாட்டம்.

இஃது,

சிறுமணவூர்

முனிசாமி முதலியாரால்

இயற்றப்பட்டு,

தமது
சென்னை சூளை
சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1908.

உ

கடவுள் துணை.

கெடைமீதில்நடிக்கும்

சர்க்கஸ்வித்தை.

இராகம்-தங்கப்பண்.

வடக்கேவெகுதூரம் வளப்பமுள்ளதேசமது - பிரான்பூருக்கடுத்த பிசகிலா அட்டகிடா- என்றுமிகப்பேர்கொண்ட இணையில்லாவூரினிலேதங்கிவசித்திருக்கும் தாஷ்டீகமானவர்கள்- மாதாபிதாக்கள்மகாவித்தைகற்றவர்கள்- அவ்விருவர்தங்களுக்கு அமைந்திடும்மைந்தர்களில் - பெரியதொருபெண்ணுக்கு பெயர்சித்திரகுளாவென்றும்-சின்னதொருபெண்ணுக்கு சிறப்பானகன்னுவென்றும்- நற்பெயர்தானமைந்து நலமுள்ளவித்தைகளாம்- கெடையின்மேலாடுவித்தை ஜிம்கரணம்போடும்வித்தை-அந்தர்பலடிகளும் அனுமந்தபாச்சல்களும்-விச்சுளிபாச்சல்களும் விசித்திரவிநோதங்களும்-சொல்லிமுடியாத சொகுசானவித்தைகளும்-அற்புதவித்தைகளும் அருமையாய்க்கற்பித்து-சமஸ்தானங்கள்தனிலே தாட்டியாய்மிகவாடி - பரிசுகள்தான்வாங்கி பண்புடனிருக்கையிலே- கோர்ட்டுவழக்காகக் குணமாகவிப்பொழுது- புத்திரர்புத்திரிகள் புகலும்மனைவியுடன்- வளப்பமுள்ள கடையுடன் வகையாய்ப்பிரயாணப்பட்டு-பேர்பெற்றசென்னைநகர்பிசகிலாலயிட்டவுசு-சமுத்திரகரையோரம்சார்ந்ததோர்மைதானத்தில்-வந்துயிறங்கியவர்-வளம்பெரியதகரக்கடை-புண்ணியவான்கள் புகலும்ஏகப்பநாய்க்கர்-இருவர்களுதவியினால் இன்பமுடன்கோட்டைதனில்- பாசுகளும் தான்வாங்கி பண்பாய்மைதானத்தில்

பெண்ணின் அலங்காரம்.

இராகம் - தங்கப்பண்.

தங்கியிருந்தவர்கள் தனிமையாயப்பொழுது ஆட்டங்களாடுதற்கு அனைவருமெழுந்திருக்க சிறப்புதனைவகித்த சீரானசித்திராளா சிவிசிறுக்கறுத்து சிமிள்போலே கொண்டையிட்டு கொண்டைக்கு யேத்ததொரு குணமுள்ளபூவுகளாம்மல்லிகைமுல்லைகளை வயங்கவேதான்முடித்து நெற்றியிற்றிலதமதை நேராகத்தான்தரி

ந்து முக்குத்திசிந்தாக்கு முகமழகாய்புல்லாக்கு கையில்கரிவளையல் கலகலெனத்தானசைய பட்டுரவிக்கைதனை பாங்காகவேயுடுத்தி அரையினில்கல்லடம் அழகாகத்தான்போட்டு அதன்பேரில் கச்சைதனை அடைவாயிறுக்கிக்கட்டி மாராப்புசேலைதனை வலுவாயிழுத்துடுத்தி பயல்மான்குட்டியைப்போல் படபடெனத்தானடந்து தங்கைதமயனுடன் தம்பிமார்தன்னுடனும் மாதாபிதாவினுடன் மைதானந்தன்னில்வந்து,

கெடைதனக்கு முன்பாகவே-கடவுளை
கிருபையுடன் தோத்தரிப்பாள்

இந்திராதிதேவர்களை யிருதயத்தில்தானினைந்து மந்திரவுச்சாடனம் மனதினில்தியானித்து தந்திரக்கயிறுதனை தன்கையால் தான்பிடித்து காலின்பெருவிரலால் கயிற்றில்மிகவூனி எட்டிநடந்ததுபோல் இயல்பாகத்தானேறி ஒட்டிமிகத்தொங்கும் - உசுமையுள்ளபாணுவை எட்டியேதான்பிடித்து இருகாலால்தாங்கியேதோ

அந்தரமாய்நிற்கிறாள்பார்-இந்த
அதிசயத்தைப்பார்த்திடுங்கள்

இராகம் - நாதனாமக்கிரியை - ஆதிதாளம்.

மந்திரம் பாரீர் கெடையாடும்அதிசயத்
தந்திரங்கேளீர்

அநுபல்லவி.

மந்திரம்பாரிந்த மானிடஜெனனத்தில்
பெண்ணாய்ப்பிறந்தவள் பெரியகெடையிலாடும் (மந்தி)

சரணங்கள்.

அறுபத்துநாலடி ஆனவுயர்கெடை
அந்திரமாய்நட்டு தந்திரக்கயர்தொட்டு
சறுவும் சற்பம்சாறை போலேகயறைதொத்தி
சற்றேனும்பயமின்றி உச்சியின்மீதேறி

காலினாற்பிடித்து அந்தர்ப்பல்டி உல்டி
கவிழ்ந்தாப்போல் அடுத்து

காலால்கழலைப்பற்றி கரத்தைப்பின்னாலெட்டி
கரகரகரவென சிரத்தைக்கிழாய்வாங்கி
தானில்கயற்றைக்கிட்டி தலைக்குமேல்காலநாட்டி
தங்கியிருக்கும்ஜெனம் அங்கம்பதறும்படி (மந்)

ககனமளாவியக்	கம்பியின்மேல்மாது
கண்ணிமைமாற்றுமுன்	வெண்ணைற்றசமூலாகி
விதனமகலஜெனம்	ஆனந்தம்பெருகிட
வேடிக்கைவெகுவிதம்	வாடிக்கையாய்செய்யும் (மங்)
கூடுவிட்டுகூடுபாயும்	வித்தைகள்கோடி
கோர்த்தசங்கிலிசரம்	பார்த்துபுகுந்துநாடி
ஓடிக்கயற்றுமேலே	காலைத்தலைக்குமேலே
ஊன்றிக்கரங்களாலே	ஜாலின்வயற்றுக்காலே (மங்)
பெரியவள்பேர் சித்திர குளா	மெனப்பேசுவார்
பெற்றமகளின்பேர்தான்	ரத்தினமெனச்சொல்லுவார்
அரியவித்தைகள்கற்றோ	ரப்பனும்மகள்மாதும்
யெல்லாமிதுவேவேலை	யென்றும்வழக்கந்தாலே (மங்)
தொங்குகிறதடியை	தொடையால்மிகயிறுக்கி
பங்கமில்லாமலே	பல்டியடிப்பதுபோல்
அங்கையர்மிகத்தாங்கி	அதிரமல்கான்கட்டி
சங்கையில்லாமலே	சட்டென்றுநின்றிடும் (மங்)
தடியையொருதொடையில்	தாங்கிவனுவிற்றொங்கி
படியிலுள்ளோர்கள்	பார்த்துமனங்களிக்க
அடவுடன்கழுத்தினில்	அந்தத்தடியைமாட்டி
அந்தரமாய்த்தொங்கும்	விந்தையாகுமிந்த (மங்)
சித்திரகுளாவென்னும்	சிறப்புப்பெயர்வகித்த
உத்தமப்பெண்ணவள்	உகமையாய்த்தானுடும்
எத்தனையோவித்தை	யெவருமதிசெயிக்க
புத்திதனில்மதித்து	போகிறாளுச்சியில் (மங்)
கன்னுவென்னும்சின்ன	பெண்ணானவளிதோ
பின்னால்காலைமாட்டி	முன்னால்கவிழ்ந்துவிழு
இன்னுமிதுநெடுநா	ளெங்குங்கண்டதில்லை
என்றுவதிசெய	மென்றுமிகச்சொல்லும் (மங்)
நாடியுச்சிதனி	லேறிச்சித்திரகுளா
நீடிக்காலால்சப்பளம்	சாடிமிகப்போட்டு
கூடியசபைதனை	நாடிபகவானைத்
நேடியாசத்தாலே	பாடித்துதித்திடும் (மங்)

இராகம் - தோடி. - ஆதிதாளம்

பல்லவி.

அற்புதசர்க்கஸின் பெருமையைச்சொல்லுவேன்
அன்பர்களேசற்றுகேளீர் - இந்த
அவனியிலிதுவரை யெவரும்நடித்ததாய்
கூறுவாருமில்லைப் பாரீர்.

சரணம்.

தற்காலம் சென்னைக்கு தூரம்வடதேசம்
தன்னகர்விட்டொருமாது
தந்தையும்மைந்தரும் மாதுடன்மூவரும்
தனித்துவந்தாரே யிப்போது - அவர்
கற்றிடும்வித்தைகள் மெத்தவுண்டாமதில்
கண்டமட்டும் சொல்வோம் மீது
ககனமளாவிய சம்பத்தின்மேலாட
கற்றதேதந்திரம் தோது
கழரத்திர மொருவர்க்கில்லை யவரற்புத மெவருக்கிணை
கண்டார்மன மண்டாதென திண்டாடிட ஒண்டொடியாள் (அற்)
மேகமளாவிய நாற்பத்துநாலடி
மேலுயரங் கொடைபாராய்-நல்ல
மேன்மைதுரைமக்க ளெல்லாரும்பிரமித்து
முழிக்குமூர் சுத்திலும் தோராய்
சாகத்துணிந்தவோர் ஜெட்டியையேரடா
வென்றாலும் அஞ்சுவான்தூராய்-இது
சாமிச்செயலல்லோ பெண்ணாய்ப்பிறந்தவள்
சபையைமிரட்டுராள்கூறாய்
சண்டப்படை கண்டற்புத மென்றோடவே அண்டத்திலே
சகரக்குழ லெனவேஅல கதிலேசுழல் மிகுநந்தர (அற்)

நொண்டிச்சிந்து.

மந்திரமகிமையைக்கேள்-இந்த
மண்டலத்திதுவரை கண்டதுமில்லை
அண்டரும்புகன்றதில்லை-மகா
பெருமைதங்கியபதி னெட்டுசித்தரும்
இப்படியுரைத்ததில்லை-இந்த
வதிசயம்போலுலகில் பார்த்ததுமில்லை
பிரான்பூரெனவெவரும்-வடதிசை
பேசியநகருக்கு அடுத்திடமாம்
அட்டகிமாவெனும்பதியாம்-அங்கே
வசிப்பவராமந்திரங்கள் செபிப்பவராம்

காளியுங்காட்டேரி-துஷ்ட
கருமுனிசெபமுனி சங்கிலிமுனி
மாடனும்மதுரைவீரன்-அகோர
வீரனுடன் அறுமுகன் கணபதியும்
சத்தியும் சாம்பசிவன்-கெட்ட
சண்டாளக்கருவுகள் யெட்சணியும்
மோகினிடாகினியும்-இந்த
மூவுலகிலுண்டான தேவதைகளை
ஈனத்தில்வசியமிடுவார்-ஆகாத
சத்துருவைகணத்திலே வதைத்திடுவார்
இப்படியவர்வலிவாம்-அடி
யெடுத்தபிடங்களெல்லா மிவர்முகமாம்
எதிர்ப்பாரொருவ ரில்லையாம்-அந்த
கெடையேரியாடுபவ ரொருவரில்லையாம்
பெருமையருமைதாங்கி-அவர்
பிறந்துவளர்ந்தநக ரதைநீங்கி
சென்னைநகரைநோக்கி அவர்
சிறந்தமந்திரவலி வதைத்தாக்கி
கோட்டைமைதானமிரங்கி விளக்குக்
கூண்டுக்கருகில்கெடை யதைத்தாக்கி
ஆடிடும்பெருமைதனை-யினி
யறைந்திடக்கேளுமென நறவினரே. (தந்தின)

உச்சியிலாடும் வித்தைகள்.

கும்மி.

பாம்புபோல்தொங்கும் கயர்பிடித்துமாது
பற்றியேசாரைபோ லேதொடுத்து
தாம்புகயற்றிலே யேரிப்போகும்வேகம்
தங்கியிருந்தோர்கள் குடல்நடுங்கும். ௧
ஒற்றைக்கயறு மிதைப்பிடித்து-மாது
ஓங்கியமெத்தைமே லேருதல்போல்
மெத்தத்துரிதமா யேரிப்போகும்வேகம்
பத்துதேகம்மக் குடல்பார்த்து. ௨
யேரிக்கயரை விடுத்துவிட்டுமாது
இரண்டுகாலுந் தொடுத்துக்கொண்டு
சிரியநாகம்போல் உள்டியடிக்கிற
சிக்கிரம்பாருங்கள் நேசர்களே. ௩
கைப்பிடிகூடக் கிடையாதொருகம்பி
கையாலேமாது தொடுத்துக்கொண்டு
யெப்படிமல்கான்போல் கட்டியேபின்னுவாள்
யென்னவதிசயம் நேசர்களே. ௪

தந்திரஜாலங்கள் செய்பவரோஒரு
வேலைதிகைத்து முழித்திடுவார்
அந்திரந்தன்னிலே பெண்ணாய்ப்பிறந்தவள்
ஆடவதிசயம் நேசர்களே. ௫

பள்டியும்உள்டியும் தானடித்தாளதோ
பதுமைபோல்தலைகீழாய் தொங்குகிறாள்
விள்ளவொண்ணாஜெனம் சுற்றிலிருப்போர்க்கு
வந்தனம்கூடவும் செய்யுகிறாள். ௬

நித்தமொருவேலை காட்டுகிறாளொரு
நிமிஷமொருவித்தை மாற்றுகிறாள்
சுத்திரியேரூப மெடுத்தாளோயில்லை
சாமியேவந்து உதித்தாரோ. ௭

மல்கான்வேலை முடிந்தபின்புமாது
மந்திரக்கோலை யெடுத்துக்கொண்டு
உல்லாசமாக சிரித்துக்கொண்டுமாது
உச்சியில்யேருவாள் நேசர்களே. ௮

உச்சியிலேறி அலகுப்பார்த்துமாது
உள்ளத்தில்சற்குரு தாள்நினைந்து
கச்சையில்அலகு முனைசொருகிமாது
கவிழ்ந்து படுத்தாள் நேசர்களே, ௯

கவிழ்ந்துஅலகை சொரிகிக்கொண்டுமாது
கையையும்காலும் விடுத்துவிட்டு
செவந்தசூரியன் போலேகரகர
வென்றுசுழலுறாள் நேசர்களே. ௧௦

குலாலன்சக்கரம் போலேசுழலையில்
கூட்டமாம்கீழே ஜெனங்களெல்லாம்
கலகலவென்று குடல்நடுங்கியவர்
கைகளையேந்துறார் நேசர்களே. ௧௧

இப்படிகீழே ஜெனங்களெல்லாமையோ
யென்னமோயேதோ வெனமயங்க
மைப்படிகண்ணாள் பம்பரம்பானுவை
மாற்றச்சுழலுறாள் நேசர்களே. ௧௨

முதுகிலலகை சொரிகிக்கொண்டு அவள்
மேல்புரமாகத் திரும்பிக்கொண்டு
கதம்பம்காற்றிலே மின்னுவதுபோலே
கன்னிசுழலுறாள் நேசர்களே. ௧௩

மெத்தவுயரத்தில் மாதிருந்துயிர்ந்த
மேலானவித்தை தனைப்புரிய
பெற்றதகப்பனும் கீழிருந்துஅப்போ
பேசுவான்கூட்டந் தனைப்பார்த்து. ௧௪

அறைவித்தைகற்றவர் கட்டவேண்டாமையா
கால்வித்தைகற்றவர் கெட்டவேண்டாம்
முழுவித்தைகற்ற துரைகள்வந்தாலே
முடியால்வணங்கி துதிப்பேனென்றான். கரு

பெண்பிள்ளையாடுறாள் கட்டவேண்டாமையா
கட்டினாலும்வெட்ட ஓடவேண்டாம்
பென்வித்தைபின்னாலே காட்டுவேனென்றவன்
ஏழைபோல்வந்தனம் செய்திடுவான். கசு

வயற்றின்கொடுமை யெனவுரைப்பார்சிலர்
வாயிலேவந்தபடி யுரைப்பார்
யென்னகொடுமையி தென்றாலுமையோ
இந்தவதிசயங்கண்டதுண்டோ. கஎ

வயற்றில்பிறந்ததொரு குழந்தையந்த
வஞ்சியோகொஞ்சம் வயதுடையாள்
கயற்றில்பெரிய விரல்கோத்து அதோ
கரணமடிக்குறாள் நேசர்களே. கஅ

உரியிலேகாலை சொருகிக்கொண்டு ஐயோ
ஊஞ்சலைப்போலவே தாங்கிக்கொண்டு
சிரியக்குழந்தை யதாடும்பெருங்கஷ்டம்
சீமையிலெங்குமே கண்டதில்லை. கசு

வித்தையறிந்தவர் கஷ்டமறிந்தவர்
வெண்ணைபோல்நெஞ்சங் கரைகரைந்து
நித்தந்தனவான்கள் பரிசுகொடுத்தாலும்
நேருமேகஷ்டம் புவியோரே உ0

தகரக்கடைத்தொழில் வியாபாரஞ்செய்கின்ற
தர்மவான்ஏகப்ப நாயகர்தான்
பகரக்கெடையாடும் யேழைகளைசொந்த
பாலரைப்போலே காப்பாற்றுகிறார். உக

நிக்கத்தரிக்கயிடங்கொடுத்து அவர்க்கு
நித்தமும்புத்திமிகத் தொடுத்து
பெற்றமகவுபோல் சார்க்கலானாந்த
புண்யவானாலே பிழைக்கலானார். உஉ

அருமைப்பெருமையுந் தானறிந்துஅவர்
ஆடலைக்கண்டு மனந்தளர்ந்து
சிறுமணவூர்முனிசாமி பாடித்தர
சிவகாமிவிலாசத்தில் அச்சிலிட்டான். உந

கெடையிலாடும்வித்தை
முற்றிற்று.